**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், செய்யாறு.</u>**

**<u>O.S.No.246/2021</u>**

| | |
|---|---|
| வாதி தரப்பு சாட்சி | **வா.சா. 2** |
| பெயர் | திருமதி. சே. கமலவேணி |
| கணவரின் பெயர் | திரு. விநாயகமூர்த்தி |
| கிராமம் | வந்தவாசி |
| வட்டம் | வந்தவாசி |
| தொழில் | சார்பதிவாளர் (பொறுப்பு) |
| வயது | 38 |

2025–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 27–ஆம் நாளன்று, திரு.M.விக்னேஷ் பிரபு, M.L., கூடுதல் சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் 1969–ஆம் ஆண்டு உறுதிமொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>முதல் விசாரணை</u> :**

1. நான் செய்யாறு சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளர் உதவியாளராக பணி செய்து வருகிறேன். தற்சமயம் சார்பதிவாளர் மாற்றுப்பணியாக திருவள்ளிக்கேணியில் பணி செய்கிறார். நான் அவரது பொறுப்பினை பார்த்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையின்பேரில் இன்று ஆஜராகி யாருடைய தூண்டுதலும் வற்புறுத்துதலுமின்றி சாட்சியம் அளிக்கின்றேன். எங்கள் அலுவலகத்தில் எந்த ஆவணங்கள் பதிவு செய்தாலும் முறையாக பார்வையிட்டு அதன்பின்பே பதிவு செய்வது வழக்கம் என்றால் சரிதான். ஆவணங்கள் பதிவு செய்வதற்கு முன்பாக ஆவணத்தில் உள்ள

தொகையை பெற்றுக்கொண்டீர்களா என்று தரப்பினர்களிடம் கேட்டு ஆவணம் பதிவு செய்வது வழக்கம் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் எங்கள் அலுவலகத்தால் முறையாக பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரிதான்.

**குறுக்கு விசாரணை** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.06.27 20:10:06 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**